களுக்காகவோ விரோதங்கள் இருந்தாலும்கூட, மக்களைப் பொறுத்த வரையிலே, ஒரு திட்டம் என்று வரும்போது, தனிப்பட்டவர்கள் மக்களை எப்படி எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. துவரம் பருப்பிலேகூட கலப்படம் செய்து விற்கிறார்கள். மனிதன் சாப்பிட்டால் நோய் வருகிற அளவுக்கு விஷம் கலந்து விற்கிற அளவிலேகூட செய்கிறார்கள் தனிப்பட்ட வியாபாரிகள். இதிலேயிருந்து மக்களைத் தப்புவிக்க, சர்க்கார் எடுக்கும் முடிவு, மக்களுக்காக ஏற்றுக்கொள்ளும் முடிவு வருமானால், நீங்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நமது தலைவர் அவர்கள் என்னை மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீண்டநேரம் அவர்கள் பொறுத்திருந் தார்கள். இந்த முக்கியமான உணவுப் பிரச்சினைபற்றி நான் பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். மீண்டும் உங்களுக்கெல்லாம் நன்றி கூறிக்கொண்டு நான் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

6. மன்றத்தின் முன்வைக்கப்பட்ட ஏடுகள்

A *Statutory Rules and order*—Nil.

B. Reports, Notifications and Other Papers.

* 110. Policy Note on Agriculture 1973–74. (Tamil).

111. Policy Note on Dairy Development Department 1973–74. (English and Tamil).

112. Commercial Budget for 1973–74, relating to Dairy Development Department.

---

* Circulated to all M.L.C. on 26th March 1973.